# 3.5 எரேமியாவின் சீர்திருத்தப் பணி



இறைவாக்கினருள் ஒருவரான எரேமியா கி.மு. 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. இஸ்ரயேல் மக்கள் கடவுளை மறந்து வாழ்ந்து கொண்டிருந்த போது சமூக சீர்த்திருத்தங்களை வலியுறுத்தி அவர்களுக்கு எச்சரிக்கை செய்தார். பபிலோன் மற்றும் யூதாவிற்கு இடையே போர் மூளும் ஓர் சூழலிலேயே இவரின் செய்தி வழங்கப்படுகிறது. யூதா அரசனும் மக்களும் சிறை பிடிக்கப்பட்டு பபிலோனியாவுக்கு கொண்டு போகப்பட்டதை நேரில் கண்டார். மக்களுக்கெதிராகத் தண்டனைத் தீர்ப்பு உரைக்குமாறு கடவுளால் பணிக்கப்பட்டிருந்தார். அத்தோடு, அம்மக்கள் திரும்பவும் பபிலோனிய அடிமைத்தனத்திநின்று மீண்டு, திரும்ப வருவதையும், நாடு வளர்ச்சியுறுவதையும் எதிர்வு கூறினார்.

## எரேமியா

அவர் தென் அரசின் நாடான யூதாவை பிறப்பிடமாகக் கொண்டவர். இவரின் தந்தை பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த இலிக்கியா ஆவார். எருசேலமிற்கு அருகிலுள்ள அனத்தோத் என்னும் இடத்தில் பிறந்தார். (பலஸ்தீனா படத்தைப் பார்த்து இடங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்)

## அழைப்பு

யூதாவின் அரசனான யோசியாவின் ஆட்சிகாலத்தில் எரேமியாவிற்கு அருளப்பட்ட வாக்கு.



'தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்; மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்'.
(எரேமியா 1:5)

நான் மிகவும் இளவயதினன் என்று ஆண்டவரிடம் கூறிய எரேமியாவிற்கு, பதில் மேற்குறிப்பிட்டவாறு அமைந்திருந்தது.



இலவச விநியோகத்திற்காக

**ஆண்டவரின் செயல்**

ஆண்டவர்தம் கையை நீட்டி தீர்க்கரின் வாயைத் தொட்டு இதோ பார் என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன் என்றார்.

**ஆண்டவரின் பதில்**

பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும் இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன் என்றார்.

## எரேமியாவின் தரிசனம்


***வாதுமை மரக்கிளை***



யூதா நாட்டு மக்களின் விடிவிற்காக இது எரேமியாவுக்கு கிடைத்த தரிசனமாகும்.

**கருத்து:-** உரிய காலத்திற்கு முன்னரே ஆண்டவர் நியாயத்தீர்ப்பு செய்ய வருவார்.

***பொங்கும் பானை***



(பானை வடக்கிலிருந்து தெற்குநோக்கி பொங்கி வடிகிறது)

**கருத்து:-** நாட்டில் குடியிருப்போர் அனைவர் மீதும் வடநாட்டிலிருந்தே தீமை பாய்ந்து வரும்.

**எரேமியாவின் சிந்தனை இவ்விதம் இருந்ததா?**

- சிறுவனான என்னை இறைவாக்கினர் பணிக்கு கடவுள் அழைப்பாரா?
- இறைவனால் கிடைத்த அழைப்பை ஏற்று பெரியவர்களுக்கு எவ்வாறு இறைவாக்கு உரைக்கப்போகிறேன்?




இலவச விநியோகத்திற்காக

- இறை செய்தியை மக்களிடம் கொண்டு செல்வதற்கு சிறுவனான என்னைத் தைரியப்படுத்துவராக.
- இளவயதினரான நமது நம்பிக்கை எந்த அளவு செயல் வடிவம் பெறக்கூடும்?

## எரேமியாவின் செய்தி

நீதியையும், நேர்மையையும் கொண்ட மக்களாக வாழ வேண்டும் என எண்ணினார். அவர் இறைச்செய்தியின் மூலம் மக்களுக்கு எடுத்துக் கூறியவற்றை கீழே நோக்குங்கள்.




இஸ்ரயேல் நாடு தீய வழியிலிருந்து திரும்புமாயின் மீட்பு உண்டு; தீய வழியிலிருந்து திரும்பாவிட்டால் அழியும் என ஆண்டவர் கூறியவற்றை அறிந்திருந்தார். 'உங்கள் தீய வழியிலிருந்து திருந்திக் கொள்ளுங்கள்' என்கிறார். நாட்டின் சீர்த்திருத்தத்திற்கு ஒவ்வொருவரும் பொறுப்பானவர்கள் எனவும் ''அவரவர் தம் தீச்செயலின் பொருட்டே சாவர். புளித்த திராட்சைப்பழம் தின்பவனுக்குத் தான் பல் கூசும்'' (எரேமியா 31:30) என்று ஆணித்தரமாகக் கூறியதால் மக்களின் வெறுப்புக்குள்ளாகிறார். சமுதாயத்திலுள்ளோரின் வெறுப்பினால் மனம் சோர்ந்து போகாதவாறு, இறைவன் எரேமியாவுக்கு குயவர் பற்றிய தரிசனத்தை அளித்தார்.


இலவச விநியோகத்திற்காக




**தரிசனம்.** ஏரேமியா 18:1-4

குயவர் ஒரு பாத்திரத்தை வனைந்து கொண்டிருக்கும்போது அது உருக்குலைந்து போகும்போதெல்லாம் புதிய பாத்திரமாக வனைவதைக் கண்டார். அவ்வாறே கடவுள் தம்மக்களை மாற்றியமைக்கிறார். ஆதலால் ஒவ்வொருவரும் தீய வழியிலிருந்து திரும்புங்கள் அல்லாது போனால் இஸ்ரயேல் மக்களாகிய நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள். என்று எரேமியா கூறியதால் அவரை இனத் துரோகி அல்லது தேசத்துரோகி என மக்கள் கூறினர்.

கடவுள் எரேமியாவுக்கு கூறியவாறே பபிலோனியா யூத நாட்டை ஆக்கிரமித்ததை அறிந்த மக்கள் எரேமியாவின் இறைவாக்கு சரியானதே எனக் கண்டனர்.

நாடு கடத்தப்பட்டோருக்கான எரேமியாவின் ஆறுதல் தரும் வார்த்தைகள்.






இலவச விநியோகத்திற்காக

இவ்வாறு அடிமைத்தனத்திற்கு உட்பட்ட நாட்டில் அவர் பணி செய்தார். ஆதலால் மக்களின் சிறை வாழ்க்கை இலகுவானது.



வாசியுங்கள்
எரேமியா 31:34

## கடவுள் உடன்படிக்கையை புதுப்பிக்கிறார்

இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைத்தனத்தில் இருந்து மீண்டு வருகையில் சீனாய் மலையில் மேசே ஊடாக நீதிச் சட்டத்தை வழங்கினார். ஆயினும் மக்கள் அதன்படி வாழத் தவறினர். மக்களை நீதிச் சட்டத்தின் வழியில் நடத்துவதிலும், 'உடன்படிக்கை' சார்ந்த மக்களாக வாழ உதவி செய்வதிலும் அவர்களுககுப் பொறுப்பாக இருந்த தலைவர்களும் குருக்களும் வழி தவறினர். எனவே கடவுள் மக்களுக்கு 'புதிய உடன்படிக்கை' வழங்குவேன் எனக் கூறுகிறார். இக்கூற்று 'நீதிச் சட்டத்தை' புறந்தள்ளிவிடுவதன்று, மாறாக நூல்களில் எழுதப்பட்ட சட்டங்கள் மக்கள் மனதில் எழுதப்படும். அப்போது தலைவர்களின் துணையின்றி கடவுள் வழிநடத்துதலில் மக்களே உடன்படிக்கையில் இருந்து வழுவாது வாழ்வர் என்பதே பொருளாகும்.

**மனிதருக்கும், இறைவனுக்குமிடையில் செயற்படும் உடன்படிக்கையை பற்றிக் கூறப்படுகிறது.**

- பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் இறைவனின் உடன்படிக்கையை முழுமையாய் நடைமுறைப்படுத்தவில்லை.

## புதிய உடன்படிக்கை



அவர்களது தீயசெயலை நான் இரக்கத்தோடு மன்னித்து விடுவேன். அவர்களுடைய பாவங்கள் இனிமேல் நினைவு கூரமாட்டேன். எபிரேயர் 8:12



இலவச விநியோகத்திற்காக

**தன்மைகள்**

- இறைவாக்கினராக செயல்படுவோருக்கு இருக்க வேண்டிய அத்தனை தன்மைகளும் எரேமியாவுக்கும் இருந்தன.
- எவ்வளவு இடையூறுகள் வந்தாலும் இறைவாக்குரைப்பதை நிறுத்தவில்லை.
- சமுதாயத்தையும், அரசனையும் திருப்திபடுத்துவதல்ல. உண்மையை நிலைநாட்டுவதே இவரது இறைவாக்கின் நோக்கமாக இருந்தது. இறை பற்றற்ற மக்களை இறைவனிடம் கொண்டு செல்வது தான் இவரின் செய்ல்பாடாக இருந்தது.

**சிந்தனைக்கு**

மேற்குறிப்பிட்ட தன்மைகள் உங்களுக்குள் எவ்வாறு செயல்படுகின்றன?

**செயல்பாடு**

1 குயவன் தன் கையினால் களிமண் பானையை உருவாக்குவதும், நொறுக்கிப் போடுவதும் அவரின் உரிமையாய் உள்ளது. இவற்றுள் எது உங்கள் வாழ்க்கையின் அனுபவமாகச் செயல்படுகிறது என்பதை விளக்கவும்.

2 ''அனைவரையும் அரவணைப்போம்'' என்ற தலைப்புக் கேற்ற கவிதை ஒன்றை எழுதுங்கள்.



இலவச விநியோகத்திற்காக